FIRST INFORMATION REPORT
முதல் தகவல் அறிக்கை
(Under Section 173 BNSS)

TAMIL NADU POLICE
INTEGRATED INVESTIGATION FORM-I

C 8319423

5/2026/AC/CB

1. District : கோவை மாவட்டம் | PS: உ.ந.க பிரிவு காவல்நிலையம் | Year: 2026 ஆண்டு | FIR No.: முத.அ. எண் | Date: 5.6.26 நாள்

2. (i) Act சட்டம்: Prevention of Corruption | Sections பிரிவுகள்: 7(a), 8 and
(ii) Act சட்டம்: Act 1988 as amended in | Sections பிரிவுகள்: 12 r/w 7(a)
(iii) Act சட்டம்: 2018 | Sections பிரிவுகள்:
(iv) Other Acts & Sections பிற சட்டங்களும், பிரிவுகளும் :

3. (a) Occurrence of Offence Day : குற்ற நிகழ்வு நாள் | Date from : நாள் முதல் 4.6.26 15.30 hrs | Date to : நாள் வரை 5.6.26 01.30 hrs
Time Period : நேர அளவு | Time from : நேரம் முதல் | Time to : நேரம் வரை
(b) Information Received at PS. Date : காவல் நிலையத்திற்கு தகவல் கிடைத்த நாள் 05.06.2026 | Time : நேரம் 15.00 hrs
(c) General Diary Reference : Entry No(s) பொது நாட்குறிப்பில் பதிவு விவரம் எண் Vol I | Time : நேரம் 15.00 hrs

4. Type of Information : Written/ Oral / Electronic form :
தகவலின் வகை : எழுத்து மூலம் / வாய் மொழியாக / மின்னணு வடிவம் – எழுத்து மூலமாக

5. Place of Occurrence (a) Direction and Distance from PS:
குற்ற நிகழ்விடம் (அ) காவல்நிலையத்திலிருந்து எவ்வளவு தூரமும், எத்திசையும் தென் மேற்கு சுமார் 25 கி.மீ.
Beat Number : முறைக் காவல் எண் | (b) Address : முகவரி

(c) In case outside limit of this Police Station, then the Name of P.S : இக்காவல் நிலைய எல்லைக்கப்பால் நடந்து இருக்குமாயின், அந்நிலையில் அந்த கா.நி.பெயர் | District : மாவட்டம்

6. Complainant /Informant (a) Name : குற்றமுறையீட்டாளர்/ தகவல் தந்தவர் பெயர் N.A. ஜாஃபர் | (b) ~~Father's~~/ Husband's Name : தந்தை / கணவர் பெயர் Tr.S. பிரதீஷ்குமார்.
(c) Date / Year of Birth : நாள் / பிறந்த ஆண்டு | (d) Nationality : நாட்டினம் | (e) Passport No. : வெளிநாட்டு கடவுச்சீட்டு எண்
Date of Issue : வழங்கப்பட்ட நாள் | Place of Issue : வழங்கப்பட்ட இடம்
(f) Occupation : தொழில் மாவட்ட ஆட்சியர் அலுவலகம் | (g) Address : முகவரி மாவட்ட ஆட்சியர் அலுவலகம் கோயம்புத்தூர்

7. Details of Known/Suspected/Unknown accused with full particulars. (Attach separate sheet if necessary)
தெரிந்த / ஐயப்பாட்டிற்குறிய / தெரியாத குற்றஞ்சாட்டப்பட்டவரின் முழுமையான விவரங்கள் (தேவையெனில் தனித்தாள் இணைக்கவும்)
1. திரு. மா. ஆனந்தகுமார், 2தலையார், சார்பதிவாளர் (1/c). தொண்டாமுத்தூர் சார்பதிவாளர் அலுவலகம்
2. திரு. முருகேசன் நாயர் ஜெகதீசன், எண் 5/22C, ராமலிங்க ஜோதி நகர், 5வது குறுக்கு தெரு, ராமநாதபுரம், கோவை
3. திரு. K. ராஜேந்திரன், 51/0 திருவள்ளுவர், 62B, தென்பகுதி தெரு, தொண்டாமுத்தூர், கோவை
4. திருமதி ராதிகா w/o அதியமான், 71B, குன்னத்தி மின் நகர், தொண்டாமுத்தூர் தெரு, லட்சுமிபுரி, கோவை
5. திரு. அமர்நாத் s/o தங்கராஜ், எண் 410/2, அண்ணா இந்திரா நகர், மருதமலை, கோவை.

8. Reasons for delay in reporting by the complainant / Informant:
குற்றமுறையீட்டாளரால் / தகவல் கொடுப்பவரால் முறையிட்டதில் தகவல் கொடுப்பதில் தாமதம்
—

9. Particulars of properties stolen / involved (Attach separate sheet if necessary)
களவாடப்பட்ட / களவிற்குள்ளான சொத்துக்களின் விவரம் (தேவையெனில் தனித் தாளில் இணைக்கவும்)

10 Total value of properties stolen / involved :
களவாடப்பட்ட / களவிற்குள்ளான சொத்துக்களின் மொத்த மதிப்பு

11 Inquest Report / Un-natural death Case No. if any:
பிண விசாரணை அறிக்கை / இயற்கைக்கு மாறான இறப்பு எண் ஏதேனும் இருந்தால்

12 FIR Contents (Attach separate sheet, if required) :
• முதல் தகவல் அறிக்கையின் சுருக்கம். (தேவையெனில் தனித்தாளில் இணைக்கவும்)

Separate sheet enclosed

13 Action taken : Since the above report reveals commission of offence(s) u/s as mentioned at item No.2 registered the case and took up the investigation / directed ..... Rank ..... to take up the Investigation / Refused Investigation / transferred to PS.....on point of jurisdiction

எடுக்கப்பட்ட நடவடிக்கை : மேலே குற்ற முறையீட்டில் உள்ளவை பிரிவு 2ல் கூறப்பட்ட சட்ட பிரிவுப்படியான குற்றமாக வழக்கு பதிவு செய்து புலனாய்வுக்கு எடுத்துக்கொள்ளப்பட்டது / பணிக்கப்படுதல் ..... பதவி..... நிலை பணியாளரின் புலனாய்வுக்கு எடுத்துகொள்ள பணிக்கப்பட்டது / மறுக்கப்பட்டு எல்லையைக் கருதி புலனாய்வுக்கு ..... காவல் நிலையத்திற்கு மாற்றப்படுகிறது.

FIR read over to the Complainant / Informant, admitted to be correctly recorded and a copy given to the Complainant / Informant free of cost.
மு.த.அ. குற்றமுறையீட்டாளருக்கு / தகவல் தந்தவருக்கு படித்துக்காட்டி, அது சரியாக எழுதப்பட்டு இருப்பதாக ஏற்றுக் கொள்ளப்பட்டு, அதன் படி நகல் ஒன்று இலவசமாக கொடுக்கப்பட்டது.

05/06/26

5.6.26

14 • Signature / Thumb Impression of the Complainant / Informant
குற்றமுறையீட்டாளர் / தகவல் கொடுப்பவரின் ஒப்பம் /
பெருவிரல் இரேகைப் பதிவு

Signature of the Officer in-charge, Police Station
காவல் நிலைய பொறுப்பு அலுவலரின் ஒப்பம்

15 Date & Time of despatch to the court:
நீதிமன்றத்திற்கு அனுப்பப்பட்ட நாளும், நேரமும்
5.6.2026, 17.00 hrs

Name பெயர் C. RAJESH
Rank நிலை ADSP, VK AC No. எண் .....
Coimbatore

கணம் முதன்மை மாவட்ட மற்றும் அமர்வு நீதிபதி, கோயம்புத்தூர் அவர்கள் முன்பு பணிந்து சமர்பிக்கப்படுகிறது:

கோவை ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவு குற்ற எண். 5/2026/AC/CB, u/s 7 (a), 8 and 12 r/w 7(a) of PC Act 1988 as amended in 2018 வழக்கின் முதல் தகவலறிக்கை வரிசை எண்8319423-ன் தொடர்ச்சி...

இன்று 05.06.2026 ஆம் தேதி 15.00 மணிக்கு கோவை ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவு கூடுதல் காவல் கண்காணிப்பாளர் C.ராஜேஷ் ஆகிய நான் அலுவலகத்தில் பணியில் இருந்த போது திருமதி.N.A.சங்கீதா, மாவட்ட ஆய்வுக்குழு அலுவலர், மாவட்ட ஆட்சியர் அலுவலகம், கோயம்புத்தூர் என்பவர் நிலையம் ஆஜராகி கொடுத்த எழுத்து மூலமான புகாரினை பெற்று கோயம்புத்தூர் ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவு குற்ற எண். 5/2026/AC/CB, u/s 7 (a), 8 and 12 r/w 7(a) of PC Act 1988 as amended in 2018 ஆக 15.30 மணிக்கு வழக்கு பதிவு செய்தேன். புகாரின் விவரம் பின்ருமாறு அனுப்புனர், N.A.சங்கீதா, மாவட்ட ஆய்வுக்குழு அலுவலர், மாவட்ட ஆட்சியர் அலுவலகம், கோயம்புத்தூர்-18. பெறுநர் கூடுதல் காவல் கண்காணிப்பாளர் ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவு, கோயம்புத்தூர்-30. ந.க.எண்.96/2026/I1, நாள்.05.06.2026 அய்யா, பொருள்: திடீர் தணிக்கை - கோவை மாவட்டம் - தொண்டாமுத்தூர் சார்பதிவாளர் அலுவலகம் - திடீர் தணிக்கை மேற்கொள்ளப்பட்டது - மேல் நடவடிக்கைக்காக புகார் மற்றும் தொடர்புடைய ஆவணங்களை அளித்தல் - சம்பந்தமாக. கோவை தொண்டாமுத்தூர் - நரசிபுரம் சின்னம்மாள் காம்ளக்ஸ் அருகில் இயங்கி வரும் தொண்டாமுத்தூர் சார்பதிவாளர் அலுவலகத்தில் சார்பதிவாளர் திரு.ஆனந்தகுமார் என்பவர் பத்திரம் பதிவு செய்வதற்கும் வில்லங்க சான்று பெறுவதற்கும் வருகை தரும் பொதுமக்களிடமிருந்தும், பத்திர எழுத்தர்களிடமிருந்தும் நேரடியாக கையூட்டு பெற்று வருவதாகவும், மேலும் அவருக்காக வேண்டி திரு.முகுந்தன் என்ற தனிநபர் பத்திர எழுத்தர்களிடமிருந்து கையூட்டு பெற்று வருவதாகவும், கிடைத்த நம்பத்தகுந்த தகவலின் அடிப்படையில், 04.06.2026 ஆம் தேதி 15.30 மணிமுதல் 05.06.2026 ஆம் தேதி 01.30 மணிவரை, கோவை மாவட்ட ஆய்வுக்குழு அலுவலராகிய நான், கோவை ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவு கூடுதல் காவல் கண்காணிப்பாளர் திரு.ராஜேஷ், காவல் ஆய்வாளர்கள் திருமதி.ஷீலா, திருமதி.எழிலரசி மற்றும் காவல் குழுவினர்களுடன் தொண்டாமுத்தூர் சார்பதிவாளர் அலுவலகத்தை திடீர் தணிக்கை மேற்கொண்டோம். அந்த திடீர் தணிக்கையின் போது கண்டுபிடிக்கப்பட்ட விவரங்கள் பின்வருமாறு: திரு.ஆனந்தகுமார், மாவட்ட பதிவாளர் அலுவலகத்தில் (தணிக்கை) உதவியாளராக பணியமர்த்தப்பட்டு பகராண்மை அடிப்படையில்

தொண்டாமுத்தூர் சார்பதிவாளர் அலுவலகத்தில் சார்பதிவாளர் பொறுப்பில் பணிபுரிந்து வந்தவர் 04.06.2026 ஆம் தேதி மதியம் 1.00 மணிக்கு மேல், சார்பதிவாளர் பொறுப்பை திருமதி.பகவதி உதவியாளரிடம் ஒப்படைத்து விட்டு சென்றுள்ளார். மேலும் அவர் அலுவலகம் வந்தமைக்காக வருகைப்பதிவேட்டில் கையொப்பம் செய்துள்ளார். அலுவலகத்தைவிட்டு வெளியில் சென்றதற்காக இயக்கப்பதிவேட்டில் எவ்வித கையொப்பமும் செய்யவில்லை. அலுவலகத்தைவிட்டு செல்வதற்காக மாவட்ட பதிவாளர் கோவை வடக்கு திருமதி.பிரபாவதி அவர்களிடம் எந்த அனுமதியும் பெறவில்லை. அவரது செல்போன் எண்ணான 9003508633 சுவிட்ச் ஆப் நிலையில் இருந்துள்ளது. திரு.முகுந்தன் பற்றி, ஜெயபிரகாஷ் அட்வகேட் அலுவலகத்தில் பணிபுரியும் சுகன்யா என்பவரிடம் விசாரித்த போது, அவர் மேற்படி திரு.முகுந்தன் என்பவர் அவரது அலுவலகத்தின் ஒரு பகுதியில்தான் கணினியில் தனியாக பணிபுரிந்து வருவதாக தெரிவித்தார். அவரிடம் முகுந்தனை தொலைபேசியில் தொடர்புகொண்டு இவ்வலுவலகத்திற்கு வரச்சொல்லி அறிவுறுத்தியன்பேரில் மேற்படி சுகன்யா அவரது செல்போனிலிருந்து முகுந்தன் என்பவரை தொடர்பு கொண்டு, தொண்டாமுத்தூர் சார்பதிவாளர் அலுவலகத்திற்கு வரச்சொன்னார். திடீர் தணிக்கை குழுவினரும் அவ்வாறே அவருக்கு அந்த தொலைபேசி இணைப்பிலேயே அறிவுறுத்தினார்கள். திரு.முகுந்தன் JP பத்தர எழுத்து அலுவலகத்தை ஒட்டியுள்ள அவரது அறைக்கு வந்தார் என்ற தகவல் தெரிந்து நானும், திடீர் தணிக்கை குழுவினரும் அங்கு சென்றோம். அவரிடம் சார்பதிவாளர் திரு.ஆனந்தகுமார் அவர்களுக்காக மற்ற பத்திர எழுத்தர்களிடமிருந்து அவர் வாங்கி வைத்திருந்த பணம் குறித்து விசாரித்த போது அவர் பத்திர எழுத்தர்களிடமிருந்து சார்பதிவாளர் திரு.ஆனந்தகுமார் அவர்களுக்காக வாங்கி வைத்திருந்த பணத்தை அவரது மேசைடிராயருக்குள் இருந்து எடுத்து ஆஜர் செய்தார். அதில் மொத்தம் ரூ.38,420/- இருந்தது. மேலும் அவரது டேபிளுக்கு மேல் இருந்த துண்டு சீட்டுக்கள் சம்மந்தமாக விசாரித்தபோது அவர் ரூ.38,000/- மற்றும் ரூ.19,000/- க்கான ஒரு துண்டு சீட்டு மற்றும் ரூ.20,700/-க்கான துண்டு சீட்டு ஆகியவை அவர் ஒவ்வொரு பத்திர எழுத்தர்களிடமிருந்தும் சார்பதிவாளர் திரு.ஆனந்தகுமார் அவர்களுக்கு கொடுப்பதற்காக வாங்கி வைத்த பணம் சம்மந்தப்பட்ட குறிப்பாகும் என்றும், ரூ.11,800/- என்று குறிப்பிடப்பட்ட சீட்டானது அவர் தொண்டாமுத்தூர் சார்பதிவாளர் அலுவலகத்தில் சீல் வைத்துகொடுத்தற்காக பத்திர எழுத்தர்களால் தனக்கு கொடுக்கப்பட்ட பணம் தொடர்பான குறிப்பாகும் என்றும் மேலும் பென்சிலில் எழுதப்பட்ட ரூ.15,000/-க்கான துண்டு சீட்டானது சார்பதிவாளர் திரு.ஆனந்தகுமார் அவர்களுக்கு கொடுப்பதற்காக ஒரு பத்திர எழுத்தர் தன்னிடம் கொடுத்த பணம் ஆகும் என்றும் தெரிவித்தார். அந்த அறையின் வெளிப்புறச்சுவரில் JP வழக்கறிஞர்கள் என்பதற்கு கீழ் எழுதப்பட்ட பெயர்களில்

திரு.S.முகுந்தன் என்ற அவரது பெயரும் இருந்தது. பின்னர் மேற்படி பணம் ரூ.38,420/- மற்றும் துண்டு சீட்டுகளுடன் தொண்டாமுத்தூர் சார்பதிவாளர் அலுவலகத்திற்கு திரு.முகுந்தன் திடீர் சோதனை குழுவினர் அறிவுறுத்தலின் பேரில் வந்தார். அவரை விசாரித்து தனியாக வாக்குமூலம் பதிவு செய்யப்பட்டது. அவர் வைத்திருந்த பணமானது பத்திர பதிவு மேற்கொண்டமைக்காக சார்பதிவாளர் திரு.ஆனந்தகுமாருக்கு கொடுப்பதற்காக பத்திர எழுத்தர்களால் முகுந்தனிடம் கொடுக்கப்பட்ட கையூட்டு பணம் என்று தெளிவாக தெரிந்ததால் மேற்படி பணம் ரூ.38,420/- விசாரணைக்காக கைப்பற்றப்பட்டது. மேற்படி துண்டு சீட்டுகளும் விசாரணைக்காக கைப்பற்றப்பட்டது. மேலும் அங்கிருந்த திரு.ராஜேந்திரன், வயது-54/2026, த/பெ.கிருஷ்ணசாமி, கதவு எண் 62-B, கெம்மனூர் ரோடு, தொண்டாமுத்தூர், கோயம்புத்தூர் என்பவரை விசாரிக்க அவர் தன்னிடமிருந்த ரூ.8,170/-ஐ எடுத்து ஆஜர் செய்தார். மேற்படி பணத்தை எதற்காக கொண்டுவந்தீர்கள் என்று கேட்டபோது அவரால் தகுந்த முகாந்தரம் கூறாமல் முன்னுக்கு பின் முரணாக பதில் அளித்தார். அவரை விசாரித்து தனியாக வாக்குமூலம் பதிவு செய்யப்பட்டது. அவர் வைத்திருந்த பணமானது சார்பதிவாளர் திரு.ஆனந்தகுமார் அவர்களுக்கு கையூட்டாக கொடுப்பதற்கு கொண்டு வந்திருக்ககூடும் என்ற சந்தேகத்தின் அடிப்படையில் மேற்படி பணம் ரூ.8,170/- கைப்பற்றப்பட்டது. மேலும் அங்கிருந்த திருமதி.ராதிகா, க/பெ.உதயகுமார், கதவு எண் 71B, குறிஞ்சி மினி நகர், தொண்டாமுத்தூர் ரோடு, வடவள்ளி, கோயம்புத்தூர் என்பவரை விசாரிக்க அவர் வடவள்ளியிலுள்ள பூபாலன் பத்திர எழுத்தர் அலுவலகத்தில் கடந்த 8 வருடங்களாக மாதம் ரூ.15,000/- சம்பளத்திற்கு வேலை செய்து வருவதாக தெரிவித்து தன்னிடமிருந்த ரூ.56,800/-ஐ எடுத்து ஆஜர் செய்தார். மேற்படி பணம் தொடர்பாக விசாரித்தபோது பதிவிற்காக அவரது அலுவலகம் மூலமாக வந்திருந்த திரு.சியாம்சுந்தர் அவர்கள்தான் இன்று ரூ.55,000/-த்தை இவ்வலுவலகத்தில் வைத்து தன்னிடம் கொடுத்ததாகவும், மீதிப்பணம் தனது சொந்த பணம் என்றும் தெரிவித்தார். அந்த கூட்டத்திலேயே நின்றுகொண்டிருந்த திரு.சியாம்சுந்தர் என்பவரை அழைத்து விசாரித்தபோது அவர் மேற்படி திருமதி.ராதிகா அவர்களுக்கு தான் எந்த பணமும் தரவில்லை என்று தெரிவித்தார். மேற்படி திருமதி.ராதிகா மற்றும் திரு.சியாம்சுந்தர் ஆகியோர்களை தனித்தனியாக விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்யப்பட்டது. மேற்படி ரூ.56,800/- தகுந்த முகாந்திரம் எதுவும் சொல்லாமல் தவறான ஒரு தகவல் தெரிவித்ததால் மேற்படி பணமானது சார்பதிவாளர் திரு.ஆனந்தகுமாருக்கு கொடுப்பதற்காக வேண்டி அவரது பத்திர அலுவலகத்திலிருந்து கொண்டுவரப்பட்ட பணமாக இருக்ககூடும் என்ற சந்தேகத்தின் அடிப்படையில் மேற்படி பணம் ரூ.56,800/- விசாரணைக்காக கைப்பற்றப்பட்டது. மேலும் விசாரணை நடத்திக்கொண்டிருக்கும்போது திரு.அமர்சிங்,

த/பெ.தங்கராஜ் (ஆவண எழுத்தர்) என்பவர் அவரிடமிருந்த பணத்தை அமர்சிங் அலுவலகத்தின் மூலம் பதிவிற்கு வந்திருந்த கிருஷ்ணா புரமோட்டர் என்ற நிறுவனத்தின் ஊழியரான திரு.R.ராஜேஷ் என்பவரிடம் கொடுத்தார். அந்த பணத்தை திரு.ராஜேஷ் அவரது பையில் வைத்துக்கொண்டார். அந்த தகவலின் அடிப்படையில் நான் திடீர் தணிக்கை குழுவினருடன் அவர்களின் அருகே சென்று அமர்சிங்கிடம் எதற்காக பணத்தை திரு.ராஜேஷ் அவர்களிடம் கொடுத்தீர்கள் என்பது தொடர்பாகவும் மற்றும் பணம் தொடர்பாகவும் அவரிடம் விசாரித்தபோது அவர் தகுந்த முகாந்திரம் கூறவில்லை. திரு.ராஜேஷ் அவர்களும் தன்னுடைய பணம் இல்லை என்றும் அமர்சிங் பதற்றமாக தன்னிடம் கொடுத்து, வைத்திருக்கும்படி கேட்டுக்கொண்டதால் தான் பையில் வைத்துக்கொண்டதாக தெரிவித்து மேற்படி பணம் ரூ.9,500/-ஐ எடுத்து ஆஜர் செய்தார். அமர்சிங் மற்றும் ராஜேஷ் ஆகியோர்களை தனித்தனியாக விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்யப்பட்டது. மேற்படி பணமானது சார்பதிவாளர் திரு.ஆனந்தகுமாருக்கு கொடுப்பதற்காக அமர்சிங்கால் கொண்டுவரப்பட்ட பணமாக இருக்ககூடும் என்ற சந்தேகத்தின் அடிப்படையில் மேற்படி பணம் ரூ.9,500/- விசாரணைக்காக கைப்பற்றப்பட்டது. மேலும் திடீர் தணிக்கையின் போது திருமதி.பகவதி அவர்கள் ஆஜர் செய்த ஆவணங்களான 1) தொண்டாமுத்தூர் சார்பதிவாளர் அலுவலகத்தின் வருகைப்பதிவேடு 2026 ஜூன் மாதத்திற்கான தாள் (பக்கம் 1-2), 2) தொண்டாமுத்தூர் சார்பதிவாளர் அலுவலகத்தில் பராமரிக்கப்பட்டு வரும் பணம் கையிருப்பு பதிவேடு-2026ஆம் வருடத்தின் 04.06.2026-ஆம் தேதிக்கான தாள். (பக்கம் 1-2) மற்றும் 3) தொண்டாமுத்தூர் சார்பதிவாளர் அலுவலகத்தில் பராமரிக்கப்பட்டு வரும் இயக்கப்பதிவேடு (இதில் 22.01.2026 தேதி வரை மட்டும் எழுதப்பட்டுள்ளது) ஆகியவை பார்வையிட்டு அதன் நகல் எடுத்து திருமதி.பகவதி அவர்களிடம் சான்றொப்பம் பெற்று கைப்பற்றப்பட்டது. மேலும் கணினியிலிருந்து பிரிண்ட்அவுட் எடுக்கப்பட்ட ஆவணங்களான 1) தொண்டாமுத்தூர் சார்பதிவாளர் அலுவலகத்தில் 04.06.2026ஆம் தேதி பதிவு செய்யப்பட்ட ஆவணங்களின் விபரம் (Year 2026 Month June Account "A" Thondamuthur) (பக்கம் 1-12), 2) தொண்டாமுத்தூர் சார்பதிவாளர் அலுவலகத்தில் 04.06.2026ஆம் தேதிக்கான Account "H" (பக்கம் 1-2), 3) தொண்டாமுத்தூர் சார்பதிவாளர் அலுவலகத்தில் 04.06.2026ஆம் தேதிக்கான Account "D" (பக்கம் 1-4) ஆகியவை பார்வையிட்டு அதில் திருமதி.பகவதி அவர்களிடம் சான்றொப்பம் பெற்று கைப்பற்றப்பட்டது. திடீர் தணிக்கையின்போது மொத்தமாக ரூ.1,12,890/- (ரூ.38,420/-, ரூ.56,800/-, ரூ.8,170/- மற்றும் ரூ.9,500/-) கைப்பற்றப்பட்டுள்ளது. இந்த திடீர் தணிக்கையின் போது, தொண்டாமுத்தூர் சார்பதிவாளராக பணிபுரிந்து வரும் திரு.ஆனந்தகுமார் பத்திர பதிவு மேற்கொண்டமைக்காக பத்திர எழுத்தர்களிடமிருந்து

திரு.முகுந்தன் மூலமாக கையூட்டு பெற்று வருகிறார் என்று தெளிவாக தெரிகிறது. மேலும் மதியம் சுமார் 1.00 மணிவரை திரு.ஆனந்தகுமார் என்பவர் பத்திரபதிவை மேற்கொண்டுள்ளார். திரு.முகுந்தன் என்பவர் திரு.ஆனந்தகுமார் என்பவருக்காகதான் கையூட்டு பணம் வசூல் செய்து வருகிறார் என்று தெரியவந்ததாலும், திரு.ஆனந்தகுமார் எந்தவித அனுமதியும் பெறாமல் தன்னிச்சையாக அலுவலகத்தைவிட்டு சென்றுள்ளதாலும், அலுவலகத்திற்கு வந்த ஆவண எழுத்தர்கள் / ஆவண எழுத்தர் அலுவலகத்தில் பணிபுரியும் அலுவலர்கள் ஆகியோர்களுக்கு சார்பதிவாளர் ஆனந்தகுமார் அவர்கள் அங்கு இல்லை என தெரிய வாய்ப்பில்லை என்பதாலும், அவர்கள் சார்பதிவாளர் திரு.ஆனந்தகுமார் அவர்களை பார்ப்பதற்காகத்தான் வந்திருக்ககூடும் என்று நம்பும்படியாக உள்ளது. எனவே திடீர் தணிக்கையில் கண்டுபிடித்த முறைகேடுகள் சம்மந்தமாக 1) திரு.ஆனந்தகுமார், 2) திரு.முகுந்தன், 3) திரு.ராஜேந்திரன், 4) திருமதி.ராதிகா மற்றும் 5) திரு.அமர்சிங் ஆகியோர்கள் மீது நடவடிக்கை எடுக்குமாறு கேட்டுக்கொள்கிறேன். இத்துடன் திடீர் தணிக்கை நடவடிக்கை குறிப்புகள், பதிவு செய்யப்பட்ட வாக்குமூலங்கள்-7, துண்டு சீட்டுகள், சார்பதிவாளர் அலுவலகத்திலிருந்து கைப்பற்றப்பட்ட ஆவணங்கள் மற்றும் கைப்பற்றப்பட்ட பணம் ரூ.1,12,890/- நான் ஆஜர் செய்கிறேன். (Sdxxxxx) மாவட்ட ஆய்வுக்குழு அலுவலர், கோயம்புத்தூர். இணைப்பு:-1).நடவடிக்கை குறிப்புகள். 2).கைப்பற்றப்பட்ட பணம் ரூ.1,12,890/- 3).கைப்பற்றப்பட்ட ஆவணங்கள் மற்றும் துண்டு சீட்டுகள் 4).பதிவு செய்யப்பட்ட வாக்கு மூலங்கள்-7. Respected Madam, Received the complaint along with enclosures on 5.6.2026 at about 15.00 hrs and registered a case in Coimbatore V&AC Cr.No. 5/2026/AC/CB, u/s 7 (a), 8 and 12 r/w 7(a) of PC Act 1988 as amended in 2018 at about 15.30 hrs (Sdxxxx) C.RAJESH, (5.6.2026) ADSP/V&AC/CBE. மேற்படி பதிவு செய்யப்பட்ட முதல் தகவல் அறிக்கை, அசல் புகார், நடவடிக்கைகள் மற்றும் மாவட்ட ஆய்வுக்குழு அலுவலரால் பதிவு செய்யப்பட்ட வாக்குமூலங்கள் ஆகியவைகளை கனம் முதன்மை மாவட்ட மற்றும் அமர்வு நீதிபதி, கோயம்புத்தூர் அவர்களுக்கும் மற்ற நகல்களை சம்மந்தப்பட்ட அதிகாரிகளுக்கு அனுப்பி வைக்கப்பட்டது.

5.6.26

(C.ராஜேஷ்)
கூடுதல் காவல் கண்காணிப்பாளர்,
ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவு,
கோயம்புத்தூர்.